# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2289 - 2022 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2022.07.15

*2289 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | 210 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022,ஒகத்து மாதம் 05ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 22ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

209 - B 082363 - 353 (2022/07)

## பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

### கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.DTS/47/11
### சிலாபம் நீதிமன்ற வழக்கு இல. 10/2022(அல்கீசி இல.)

**பகிரங்க ஏல விற்பனை**

*2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக மாவட்ட நீதவானின் கட்டளையின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயற்படுத்தி,*

*1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் முன்னேஸ்வரம் பத்துவையில் , பிட்டிகல் கோரளையின் , சிலாபம் பதிவுப் பிரிவுக்குட்பட்ட மைக்குளத்தில் அமைந்துள்ள பொன்னவரன்பிட்டிய பன்கரன்தோட்டம் அனகிதங்கு இந்திப்பிட்டியவத்தை மற்றும் அலம்பவத்த மற்றும் தற்போது கிறிஸ்டிதோட்டம் எனும் காணிக்கு வீ. பேரேரா நில அளவையாளர் என்பவரினால் 1955ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல.833 எனும் வரைபடத்தில் காணிக்குரிய எல்லைகள்: வடக்கு: மருத்துவமனையும்; கிழக்கு: சிலாபம் தொடக்கம் கொழும்பு வரையிலான நெடுஞ்சாலை; தெற்கு: ரீ.ஏ.டக்ளஸ் பெரேராவுக்கு உரித்தான இந்த காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட பகுதி மற்றும் மேற்கு: வீ. பெரேரா நில அளவையாளரினால் 1956 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் தகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1004 எனும் அளவைப் படத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட இந்த காணியின் பகுதி எனும் இந்த எல்லைக்குள் அமைந்துள்ள 20 பேர்ச் (0ஏ.0றூ.20பே.) விசாலங்கொண்ட தரைப்பகுதியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அனைத்து சகலதும் உட்படவாகும்.*

*2. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் முன்னேஸ்வரம் பத்துவையில் , பிட்டிகல் கோரளையின் , சிலாபம் பதிவுப் பிரிவுக்குட்பட்ட மைக்குளத்தில் அமைந்துள்ள பொன்னவரன்பிட்டிய பன்கரன்தோட்டம் அனகிதங்கு இந்திப்பிட்டியவத்தை மற்றும் அலம்பவத்த மற்றும் தற்போது கிறிஸ்டிதோட்டம் எனும் காணிக்கு வீ. பேரேரா நில அளவையாளர் என்பவரினால் 1956ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல.1004 எனும் வரைபடத்தில் காணிக்குரிய எல்லைகள்: வடக்கு: மருத்துவமனையும்; கிழக்கு: வீ. பெரேரா நில அளவையாளரினால் 1955 ஆம ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 833 எனும் வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட இந்த காணியின் பகுதி; தெற்கு: ரீ.ஏ.டக்ளஸ் பெரேராவுக்கு உரித்தான இந்த காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட பகுதி மற்றும் மேற்கு: பரிமலத்தினுடைய இதன் மிகுதி காணி எனும் இந்த எல்லைக்குள் அமைந்துள்ள 20 பேர்ச் (0ஏ.0றூ.20பே.) விசாலங்கொண்ட தரைப்பகுதியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அனைத்து சகலதும் உட்படவாகும்.*

*2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.*

***விற்பனை தொடர்பான அறிவித்தலுக்காக.**- 2022.07.15 ஆந் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லிநியுஸ் பத்திரிகைகளிலும் 2022.07.15 ஆந் திகதி கொண்ட அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் பார்க்கவும்.*

***காணிக்கு பிரவேசிக்கும் மார்க்கம்.**- கொழும்பு சிலாபம் பிரதான பாதையில் சிலாபம் ஆனந்த வித்தியாலயம் முன்னிலையில் மற்றும் சிலாபம் மருத்துவமனைக்கு அருகாமையில் அமைந்துள்ள காணி.*

***செலுத்தும் முறை.**- கொள்வனவாளரினால் கொள்வனவு விலையின் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம் (25%) ஆதனத்தை கொள்வனவு செய்த பின்னர் உடனடியாக செலுத்தப்பட வேண்டியதுடன், கொள்வனவு விலையின் மிகுதி நூற்றுக்கு எழுபத்தைந்து சதவீதம் 75% விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.*

*ஏலதாரரின் கமிஷன் பணம், ஏலத்திற்காக செலவிடப்படும் அனைத்து போக்குவரத்து செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் கொள்வனவாளரினால் செலுத்தப்பட வேண்டும்.*

*உரித்து உறுதியை சோதனையிடுவதற்காக மற்றும் மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக கீழ்க்காணும் நபரை தொடர்பு கொள்ளவும்.*

*பதிவாளர் , சிலாபம் மாவட்ட நீதிமன்றம் , சிலாபம்.*

*07– 123*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.